# குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாய ஆரம்பக் கல்விக்கான உரிமைச் சட்டம், 2009

## Right of Children to Free and Compulsory Education – (RTE) Act 2009




Resource Centre for Participatory Development Studies
RCPDS
kinder not hilfe
CHILD LINE 1098 NIGHT & DAY

# குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாய ஆரம்பக் கல்விக்கான உரிமைச் சட்டம், 2009

**Right of Children to Free and Compulsory Education – (RTE) Act 2009**

## கல்வியை அடிப்படை உரிமையாக்குதல் - அரசமைப்புச் சட்டத்தின் 86-வது சட்டத்திருத்தம்

நாட்டிலுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் (குறைந்தது) எட்டாம் வகுப்பு வரை கல்வியை வழங்க வேண்டும் என்ற இலக்கு இதுவரை முழுமையடையவில்லை. கல்விக்கான உரிமை அடிப்படை உரிமை என்றும், 14 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் கல்வியை உறுதிசெய்ய வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியும் கூட இந்த நிலைதான். 1994ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்தியாவில் குழந்தைகளின் எண்ணிக்கை 34.5கோடி. இது இந்திய மக்கள்தொகையில் 38 சதவீதமாகும். இதில் 13 சதவீதம் பேர் அதாவது சுமார் 13.7 கோடி பேர் 5 வயதுக்கு உட்பட்டவர்கள். தொடக்கக் கல்வியில் தங்களைப் பதிவுசெய்துகொள்வோர் குறைந்தது - ஏட்டுக் கணக்குப் படியாவது 100 சதவீதம்.

ஆனால் இதில் 34 சதவீதம் பேர் தொடக்கக் கல்வி நிலையிலேயே படிப்பைக் கைவிடுகிறார்கள். படிக்காத பெண் குழந்தைகளின் வீதம் இன்னும் அதிகம். 6 முதல் 14 வயது வரையுள்ள 6.5 கோடி குழந்தைகள் பள்ளிக்கு வெளியே இருக்கிறார்கள் என்று மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் மதிப்பிட்டுள்ளது. இதுகூட குறைவான மதிப்பீடுதான் என்று அவர்கள் உறுதியாகக் கூறுகிறார்கள். 1991ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி 5 - 14 வயதுள்ள குழந்தைகள் ஏறத்தாழ 20 கோடியே 90 இலட்சம். இதில் ஏறத்தாழ 10 கோடியே 60 இலட்சம் குழந்தகளே பள்ளி அமைப்புக்குள் வந்திருக்கிறார்கள்.

அரசமைப்புச் சட்டத்தின்படி தொடக்கக் கல்வியை அடிப்படை உரிமையாக்குவது பற்றி ஆராய மாநிலக் கல்வி அமைச்சர்களைக் கொண்ட குழு ஒன்று (சைக்கியா குழு அறிக்கை என்றும் அழைக்கப்படுகிறது) 1996-ல்

அமைக்கப்பட்டது. 1997 ஜனவரியில் இந்தக் குழு அதன் அறிக்கையைச் சமர்ப்பித்தது. 6 முதல் 10 வயதுக்குட்பட்ட சுமார் 3 கோடியே 30 லட்சம் குழந்தைகள் பள்ளிக்கு வெளியே இருக்கிறார்கள் என்று அக்குழு மதிப்பிட்டது. பள்ளிப் படிப்பைப் பாதியில் கைவிடுவோரில் ஆண் குழந்தைகளைவிட பெண் குழந்தைகள் எண்ணிக்கையே அதிகம். கிராமம், நகரம் இரண்டு பகுதிகளிலும் இதுதான் நிலை. தாழ்த்தப்பட்டோர், பழங்குடி சமூகத்தின் குழந்தைகளும் அதேபோல் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த குழந்தைகளும் மிகக் குறைந்த அளவிலேயே பள்ளிகளில் படிக்க வருகிறார்கள். முன்னேறிய சாதிப் பிரிவினரைவிட இவர்களின் எண்ணிக்கை இதில் மிகக் குறைவாகவே இருக்கிறது.



# 2010 ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்ட

# குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாய ஆரம்பக் கல்விக்கான உரிமைச் சட்டம், 2009

## (Right of Children to Free and Compulsory Education – (RTE) Act 2009)

- இச்சட்டம் ”குழந்தைகளின் இலவச கட்டாய கல்வி உரிமை சட்டம் 2009” என்று குறிப்பிடபடுகிறது. இச்சட்டம் 6-14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு தொடக்க கல்வி முடியும் வரை இலவச மற்றும் கட்டாய கல்வி பெறம் உரிமைக்கு வழிசெய்கிறது.

- 26 ஆகஸ்ட் 2009 குடியரசு தலைவர் ஒப்புதல்

- 27 ஆகஸ்ட் 2009 மத்திய அரசு செய்தி வெளியீடிதழ்

- 1 ஏப்ரல் 2010 நடைமுறை )ஜம்மு காஷ்மீர் நீங்கலாக)

### சிறப்பு அம்சங்கள்.........

✪ 6-14 வயது குழந்தைகள் இலவச கட்டாய கல்வி பெறுகிற உரிமை உண்டு.

✪ தொடக்க கல்வியை தடுக்க கூடிய வகையில் கட்டணங்கள் செலுத்தவோ செலவு செய்ய வேண்டியதில்லை

✪ சிறப்பு குழந்தைகள் (ஊனமுற்றோர் சட்டம் 1996 - சம வாய்ப்புகள்,பாதுகாப்பு,முழுபங்கேற்பு) இலவச கட்டாய கல்வி பெறுகிற உரிமை உண்டு

✪ 6 வயதுக்கு மேற்பட்ட குழந்தை பள்ளிசெல்லாமல் அல்லது தொடக்க கல்விதடைப்பட்டிருந்தாலோ அதன் வயதுக்கு பொருத்தமான வகுப்பில் சேர்க்கப்படும்

- குறிப்பிட்ட கால அளவுகளில் சிறப்புப் பயிற்சியை பெறுகிற உரிமை உண்டு

- 14 வயதிற்கு பிறகும் கூட தொடக்க கல்வியை முடிக்கும் வகையில் கல்வி பெறும் உரிமை உண்டு

- குழந்தை தொடக்க கல்வியை தொடரமுடியாத நிலையில் மாநிலத்திற்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ வேறு ஒரு பள்ளிக்கு சேர்ந்து கொள்வதற்கு கோரும் உரிமை உண்டு [வகுத்துரைக்கப்பட்ட பிரிவு]

- குழந்தை பயின்ற பள்ளியின் தலைமை ஆசிரியர் அல்லது பொருப்பாளர் உடனடியாக மாற்றுச் சான்றிதழ் வழங்க வேண்டும்

- மாற்றுச்சான்றிதழ் சமர்பிப்பதற்கு கால தாமதம் ஆகும் நிலையில் பள்ளியில் அனுமதிப்பதை தாமதப்படுத்த கூடாது

- மாற்று சான்றிதழை வழங்குவதற்கு தாமதப்படுத்தும் தலைமை ஆசிரியர் அல்லது பொறுப்பாளர் மீது பணி விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்

- அரசுதவிப் பெறா தனியார்ப் பள்ளிகள் மற்றும் தனித்து வகுத்துரைக்கப்பட்ட பள்ளிகளில் முதல் வகுப்பில் குறைந்தது 25 விழுக்காடு குழந்தைகளை அண்டைப் பகுதிகளிலுள்ள நலிந்த பிரிவுகள் மற்றும் ஒதுக்கப்பட்ட பிரிவ்களைச் சேர்ந்த குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களுக்குத் தொடக்கக் கல்வி முடியும் வரையில் இலவச, கட்டாயக் கல்வியை வழங்க வேண்டும்

# மத்திய, மாநில அரசாங்கம் மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்தின் கடமைகள்

- பள்ளி இல்லாத பகுதியில் அந்த பகுதி அல்லது அருகாமையில் ஒரு பள்ளியை இந்த சட்டம் நடைமுறைக்கு வரத்தொடங்கிய 3 ஆண்டுக்குள் நிறுவிட வேண்டும்
- சட்டத்தின் விதிகளை செயல்படுத்துவதர்கான நிதியை வழங்குவது மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கு உடன் இயங்குகின்ற பொறுப்பு உண்டு
- ஒவ்வொரு குழந்தைக்கும் இலவச மற்றும் கட்டாயத் தொடக்க கல்வியை வழங்க வேண்டும்
- அருகாமையில் பள்ளி உள்ளதை உறுதி செய்தல் வேண்டும்
- வாய்ப்பற்ற மற்றும் நலிந்த பிரிவை சார்ந்த குழந்தைகளின் தொடக்க கல்வி நிறைவு செய்வதை உறுதி செய்தல் வேண்டும்
- பள்ளியின் உள்கட்டமைப்புகள் வழங்க வேண்டும் [கட்டிடம்,ஆசிரியர்கள்,கற்றல் உபகரணங்கள்]
- சிறப்பு பயிற்சிக்கான வசதிகளை வழங்க வேண்டும்
- குழந்தை தொடக்க கல்வியை நிறைவு செய்வதை உறுதிபடுத்தவும்-கண்காணிகவும் வேண்டும்
- பள்ளிக்கான நடைமுறை விதிகள் மற்றும் தரமான தொடக்க கல்வியை உறுதி செய்ய வேண்டும்.
- ஆசிரியர் பயிற்சிகான வசதிகளை வழங்க வேண்டும்



# உள்ளாட்சி நிர்வாகத்தின் கடமைகள்

- நிர்வாகத்திற்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் 14 வயது வரை உள்ள குழந்தைகள் பற்றிய ஆவணங்களை பராமரிக்க வேண்டும்
- புலம் பெயர்ந்த குடும்பங்களின் குழந்தைகள் பள்ளியில் சேர்க்கப்படுவதை உறுதிப்படுத்தவேண்டும்
- பள்ளியின் செயல்பாட்டை கண்காணிப்பு செய்ய வேண்டும்
- கல்வி ஆண்டுக்கான குறிப்பேட்டினை தீர்மானிக்க வேண்டும்

# பள்ளி மற்றும் ஆசிரியர் பொறுப்புகள்

- பள்ளியில் சேர்க்கப்படும் அனைத்து குழந்தைகளுக்கும் இலவச கட்டாய கல்வி வழங்க வேண்டும்
- எந்த பள்ளியும் ஒரு குழந்தையை சேர்க்கும் பொழுது குழந்தையின் பெற்றோர்/பாதுகாப்பாளரிடமிருந்து எந்த ஒரு கட்டணமும் வசூலிக்க கூடாது
- ஒரு குழந்தையை பள்ளியில் சேர்ப்பதற்கு குழந்தையை அல்லது அதன் பெற்றோர்/பாதுகாப்பாளரை எந்த ஒரு தேர்வு செயற்பாடு முறைக்கு உட்படுத்த கூடாது
- குழந்தையை பள்ளியில் சேர்ப்பதற்கு 1986 ஆம் ஆண்டு பிறப்பு இறப்பு மற்றும் திருமண பதிவுச்சட்டம் விதிகளின் கீழ் வழங்கப்படும் பிறப்பு சான்றிதழ் அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டும்
- வயது சான்றிழ் இல்லாத காரணத்திற்காக எந்த ஒரு குழந்தைக்கும் பள்ளிச்சேர்க்கை அனுமதி மறுக்கப்படக் கூடாது
- பள்ளியில் சேர்க்கப்படும் எந்தவொரு குழந்தையும் தொடக்க கல்வி முடியும் வரையில் எந்த ஒரு வகுப்பிலும் நிறுத்தி வைக்கப்பட கூடாது வெளியேற்றப்படவும் கூடாது
- எந்த ஒரு குழந்தையும் உடல்ரீதியான /மனரீதியான துன்புறுத்தலுக்கோ /தண்டனைக்கோ உள்ளாக்கப்பட கூடாது

# ஆசிரியர்களின் கடமைகளும், பணிகளும்

- பள்ளிக்குத் தொடர்ந்தும் உரிய நேரப்படியும் வருதல்.
- பாடத்திட்டத்தை முழுமையாக நடத்தி முடித்தல்.
- முழு பாடத்திட்டத்தையும் வரையறுக்கப்பட்ட கால அளவுக்குள் முடித்தல்ளூ
- ஒவ்வொரு குழந்தையின் கற்றல் திறனையும் மதிப்பிடுதல், தேவைப்படுமானால் கூடுதல் பயிற்சி வழங்கி ஈடுசெய்தல்ளூ
- பெற்றோர் மற்றும் பாதுகாப்பாளர்களுடன் சந்திப்புக் கூட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்தி, குழந்தையின் தொடர்ச்சியான வருகை, கற்றல் திறன், கற்றலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் இதர பொருத்தமான தகவல்களைத் தெரியவைத்தல்ளூ
- வகுக்கப்படும் இதர பணிகளையும் செய்தல்
- பள்ளியில் வரையறுக்கப்பட்ட கடமைகளை ஒரு ஆசிரியர் செய்யத் தவறுவாரானால் பணிவிதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்.
- அவ்வாசிரியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்பாக அவர் தரப்பு வாதத்தைக் கேட்பதற்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும்.
- ஆசிரியருக்கு குறைகள் உரிய முறையில் தீர்க்க வழிகாணப்படும்.

### மாணவர் ஆசிரியர் விகிதம்

- இந்த சட்டம் நடைமுறைக்கு வர தொடங்கிய 6 மாதங்களுக்குள் அட்டவணையில் வரையறுக்கப்பட்டுள்ளபடி ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர் - ஆசிரியர் விகிதம் முறையாக இருப்பதை அரசு அல்லது உள்ளாட்சி அமைப்புகள் உறுதிப்படுத்த வேண்டும்.
- மாணவர் - ஆசிரியர் விகிதத்தைப் பராமரிக்க ஒரு பள்ளியில் நியமிக்கப்படும் எந்தவொரு ஆசிரியரும் வேறு பள்ளியிலோ அல்லது அலுவலகத்திலோ பணியாற்றும்படி செய்யக்கூடாது. கல்வி சாரா வேறு பணிகளுக்கு அனுப்பக்கூடாது.

## ஆசிரியர் காலி பணியிடங்களை நிரப்புதல்

- அரசு அல்லது உள்ளாட்சி அமைப்புகளால் நேரடியாகவோ மறைமுகமாகவோ நிறுவப்பட்டு, உடமையாக்கப்பட்டு கட்டுப்பாட்டிலிருக்கிற அல்லது நிதி வழங்கப்படுகிற ஒரு பள்ளி தொடர்பான நியமன அதிகாரம் கொண்ட அமைப்பு, அந்தப்பள்ளியில் காலியாகும் ஆசிரியர் பணியிடங்கள் எண்ணிக்கை அனுமதிக்கப்பட்ட மொத்த ஆசிரியர் பணியிடங்களின் எண்ணிக்கை 10 விழுக்காட்டிற்கு மேல் சொல்லாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

## கல்விசாரா நோக்கங்களுக்கு ஆசிரியர்களை அனுப்ப தடை

- மக்கள்தொகை கணக்கெடுப்பு, பேரிடர் நிவாரண பணிகள் அல்லது உள்ளாட்சி அமைப்புக்கோ மாநில சட்டமன்றத்துக்கோ நாடாளுமன்றத்துக்கோ நடைபெறும் தேர்தல்கள் தொடர்பான பணிகள் தவிர வேறு கல்வி சாராத எந்தப் பணிக்கும் எந்த ஒரு ஆசிரியரும் அனுப்ப மாட்டார்கள்.

## ஆசிரியர்களின் தனிப்பட்ட பயிற்சி அளிக்க தடை

- எந்தவொரு ஆசிரியரும் தனிப்பயிற்சி (டியூசன்) நடத்த அனுமதியில்லை..



# பள்ளி மேலாண்மைக் குழு

பள்ளிகள் அல்லது ஒரு பள்ளி உள்ளாட்சி நிர்வாகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் - பள்ளிகளில் சேர்க்கப்பட்ட குழந்தைகளின் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர், ஆசிரியர்கள் கொண்ட பள்ளி மேலாண்மை குழு ஒன்றை அமைக்க வேண்டும்

குழவின் உறுப்பினர்களில் 75% பெற்றோர் அல்லது பாதுகாவளர்களாக இருக்க வேண்டும்

மீதமுள்ள 25%.......

- மூன்றில் ஒரு பகுதியினர் உள்ளூர் நிர்வாகத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதியாக இருக்கவேண்டும்
- மூன்றில் ஒரு பகுதியினர் பள்ளி ஆசிரியர்களாக இருக்க வேண்டும்
- மூன்றில் ஒரு பகுதியினர் உள்ளூர் கல்வியாளர்,பள்ளி குழந்தைகள் இருக்க வேண்டும்.
- வாய்ப்புகள் மறுக்கப்பட்ட / நலிந்த பிரிவுகளை சேர்ந்த பெற்றோர் அல்லது பாதுகாவளர் அக்குழுவில் விகிதாச்சார முறைபடி பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்
- குழுவின் உறுப்பினர்களில் 50% பெண்களாக இருக்க வேண்டும்



# கல்வி உரிமைச் சட்டத்தை மீறினால்

இச்சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பாதுகாக்கத் தேவைப்படும் ஆய்வுகளைச் செய்வதற்கும், புகார்களை விசாரிப்பதற்கும், குழந்தை உரிமைகளை பாதுகாப்பதற்கான தேசிய கமிஷனுக்கு (The National Commission for the Protection of Child Rights), வழக்குகளை விசாரிக்க ஒரு குடிமை நீதிமன்றத்திற்கு அளிக்கப்படும் அனைத்து அதிகாரங்களும் வழங்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலமும் குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான மாநில கமிஷன்கள் (State Commission for the Protection of Child Rights - SCPCR) அல்லது கல்வி உரிமைப் பாதுகாப்பு ஆணையங்களை (Right to Education Protection Authority - REPA) அமைந்துள்ளது. குறைகள் பற்றி மனு அளிக்க விரும்பும் எவரும், உள்ளூர் அதிகாரிகளிடம் எழுத்து மூலமான புகார் அளிக்கலாம்.

குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான மாநில கமிஷன்கள் (State Commission for the Protection of Child Rights - SCPCR) அல்லது கல்வி உரிமை பாதுகாப்பு ஆணையங்களால் மேல்முறையீடுகள் மீது முடிவுகள் எடுக்கப்படும். அவற்றால் வழங்கப்படும் தண்டனைகளை நிறைவேற்ற, மாநில அரசின் நியமனம் பெற்ற அதிகாரியின் ஒப்புதல் தேவைப்படும்.

## இலவச மற்றும் கட்டாயக் கல்விச் சட்டத்தின் பிரிவு 13

எந்தப் பள்ளியோ அல்லது தனிநபரோ, குழந்தையின் பள்ளிச் சேர்க்கையின் போது, அதன் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரிடமிருந்து தலைக் கட்டணம் வசூலிலிப்பதோ அல்லது முன்தேர்வு முறைக்கு உட்படுத்துதலோ கூடாது. உட்பிரிவு (1) க்கு புறம்பாக, தலைக்கட்டணம் வாங்கும் பள்ளிகள் மற்றும் தனி நபர்களுக்கு வசூலிலிக்கப்பட்ட கட்டணத்தைவிட பத்து மடங்கு வரை அபராதம் விதிக்கப்படும். குழந்தைகளை பள்ளியில் அனுமதிப்பதற்கு முன் தேர்வு முறைக்கு உட்படுத்தினால், முதல் தடவையாக மீறும் பொழுது ரூ 25,000/- வரையிலும், தொடர்ந்து மீறும் ஒவ்வொரு முறையும் ரூ 50,000/- வரையிலும் அபராதம் விதிக்கப் படும்.

## பாடத்திட்டம் மற்றும் மதிப்பீட்டு நடைமுறைகள்

- தொடக்கக் கல்விக்கான பாடத்திட்டத்தையும் மதிப்பீட்டு முறையை உரிய கல்வித்துறை அதிகார அமைப்பு வகுத்தளிக்கும்.
- பாடத்திட்டத்தையும் மதிப்பிடும் நடைமுறையையும் வகுக்கிற கல்வித் துறை அதிகார அமைப்பு பின்வரும் அம்சங்களைக் கருத்தில் கொள்ளும்.
- அரசியல் சாசனத்தில் கூறப்பட்டுள்ள மதிப்பிடுகளுக்கு ஒத்திசைந்ததாக இருத்தல்.
- குழந்தையின் முழு வளர்ச்சி
- குழந்தையின் அறிவு மற்றும் திறனை வளர்த்தல்
- குழந்தைக்கு இணக்கமான முறையிலும், குழந்தையை மையப்படுத்திய முறையிலும் செயல்வழி கற்றல், கண்டறிதல் மற்றும் ஆராய்ந்தறிதல் ஆகியவற்றை வளர்த்தல்.
- பயிற்றுமொழி என்பது கூடிய வரையில் குழந்தையின் தாய்மிழியிலேயே இருத்தல்.
- குழந்தை அச்சமின்றியும் மன உளைச்சல் இன்றியும் பதட்டமின்றியும் பயில செய்தல், குழந்தைத் தன் கருத்துகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்த உதவுதல்.
- குழந்தையின் அறிவு, புரிதல் மற்றும் அதனை செயல்படுத்தும் திறன் ஆகியவற்றை விரிவாகவும் தொடர்ச்சியாகவும் மதிப்பிடுதல்.
- **தேர்வு மற்றும் படிப்பை முடிப்பதற்கான சான்றிதழ்**
- தொடக்கக் கல்வியை முடிக்கும் வரையில் எந்தவொரு குழந்தையும் எந்தவொரு குழந்தையும் எந்தவொரு வாரிய (போர்டு) தேர்வையும் எழுதி தேர்ச்சி அடைய வேண்டிய அவசியமில்லை.
- தொடக்கக் கல்வியை முடிக்கிற அனைத்துக் குழந்தைக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.



# குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாய ஆரம்பக் கல்விக்கான உரிமைச் சட்டம், 2009

**Right of Children to Free and Compulsory Education – (RTE) Act 2009**

**கல்வி என்பது குழந்தைகளின் அடிப்படை உரிமையாகும்.**
**ஐ.நா. குழந்தை உரிமை பிரகடனத்தின்**

| | |
|---|---|
| **பிரிவு 23 ல்** | **சவால்களை சந்திக்கக்கூடிய குழந்தைகளுக்கு சிறப்பு கல்விக்கான உரிமை உண்டு அதோடு அவர்கள் முழுமையான வாழ்வைப்பெற சிறப்பு கவனமும் ஆதரவும் அளிக்கப்பட வேண்டும்.** |
| **பிரிவு 28 ல்** | **குழந்தைகள் தரமான கல்வியை பெறுவதற்கு உரிமை உண்டு. பெரியவர்கள் அவர்களை பள்ளிக்குச் செல்ல ஊக்கப் படுத்தி எவ்வளவு படிக்கிறார்களோ அவ்வளவு வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.** |

**என்று கூறப்பட்டுள்ளது.**

இந்த பிரகடனத்தை இந்திய அரசாங்கமும் ஏற்கொண்டுள்ளது. இதை உறுதி செய்யும் விதமாக "குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாய ஆரம்பக் கல்விக்கான உரிமை சட்டம் 2009" இந்திய அரசு கொண்டு வந்துள்ளது.

இந்த சட்டத்தை பெற்றோர்கள், பள்ளி நிர்வாகம், ஆசிரியர்கள், மத்திய மாநில அரசுதுறை அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்புகள் சிறப்புடன் செயல்படுத்தி குழந்தைகளுக்கு தரமான கல்வியை கொடுத்து முழமையான படிப்பறிவு உள்ள ஒரு இந்தியாவை உருக்க வேண்டுகிறோம்.

**குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாய**
**கல்வி உரிமைசட்டத்தை வரவேற்போம்**
**குழந்தைகளின் வளமான வாழ்விற்கு வழிவகுப்போம்**

**இந்த சட்டத்தை குறித்து மேலும் விபரங்களை தெரிந்து கொள்ள கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்**

**Childline - 1098**, 1/14, - G7D, A.A. Road, Pandian Nagar,
Virudhunagar, Phone – 04562 247 997
**Resource Centre for Participatory Development Studies**
Plot No, 7, Park Town Sixth Street, Post and Telegraph Colony
Madurai 625 017, Tamilnadu, India
rcpdsmdu@gmail.com, www.rcpds.org



# குழந்தை உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையில் அடங்கியுள்ள பிரிவுகள்

## வழங்கப்படும் உரிமைகள்

| | |
|---|---|
| பிரிவு 1 | 18 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இந்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள அனைத்து உரிமைகளும் உண்டு. |
| பிரிவு 3 | எல்லா பெரியவர்களும் குழந்தைகளுக்கான சிறந்ததையே செய்ய வேண்டும். முடிவுகள் எடுக்கும் போது எப்படி அது குழந்தைகளை பாதிக்கும் என்று உணரவேண்டும். |
| பிரிவு 5 | குழந்தை உரிமைகளை பாதுகாப்பதும், பயிற்சி செய்து பார்க்க உதவுவதும் குடும்பங்களின் பொறுப்பு. |
| பிரிவு 9 | குழந்தைககள் பாதுகாப்பாக இருக்கும் பட்சத்தில் தங்கள் பெற்றோருடன் வாழ உரிமை உண்டு. யார் குழந்தைகளுக்கு கரிசனம் காட்டுகிறார்களோ அந்த குடும்பத்தோடு வாழ உரிமை உண்டு. |
| பிரிவு 10 | குழந்தையும் பெற்றோரும் வெவ்வேறு நாடுகளில் வசிப்பவர்களாக இருந்தால், குழந்தை பெற்றோரோடு அதே இடத்தில் வசிக்க உரிமை உண்டு. |
| பிரிவு 18 | குழந்தைகளின் வளர்ச்சிக்கு பெற்றோர்களே பொறுப்பானவர்கள். |
| பிரிவு 20 | குழந்தைகள் பெற்றோரோடு வாழமுடியாவிட்டால், அரசால் சிறப்பு கவனமும் உதவியும் அளிக்கப்பட வேண்டும். |
| பிரிவு 23 | சவால்களை சந்திக்கக்கூடிய குழந்தைகளுக்கு சிறப்பு கல்விக்கான உரிமை உண்டு அதோடு அவர்கள் முழுமையான வாழ்வைப்பெற சிறப்பு கவனமும் ஆதரவும் அளிக்கப்பட வேண்டும். |
| பிரிவு 26 | குடும்பங்கள் வறுமையாக இருக்கும்பட்சத்தில், குழந்தைகள் அரசிடம் இருந்து உதவி பெறுவதற்கான உரிமை உண்டு. |
| பிரிவு 27 | குழந்தைகள் உணவு, உறைவிடம், உடை மற்றும் அடிப்படைத் தேவைகளை பெற்றுக் கொள்வதற்கான உரிமை உண்டு. |
| பிரிவு 28 | குழந்தைகள் தரமான கல்வியை பெறுவதற்கு உரிமை உண்டு. பெரியவர்கள் அவர்களை பள்ளிக்குச் செல்ல ஊக்கப் படுத்தி எவ்வளவு படிக்கிறார்களோ அவ்வளவு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். |
| பிரிவு 29 | கல்வி குழந்தைகளின் திறன்களை வளர்க்க உதவுவதோடு பிறரோடு சுமூகமாக வாழவும், சுற்றுச்சூழல் பாதுகாக்கவும், பிறரை மதிக்கவும் கற்றுக் கொடுக்க வேண்டும். |
| பிரிவு 31 | குழந்தைகள் விளையாடவும் போதிய ஓய்வெடுக்கவும் உரிமை உண்டு. |



# குழந்தை உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையில் அடங்கியுள்ள பிரிவுகள்

## பாதுகாப்பிற்கான உரிமைகள்

| | |
|---|---|
| பிரிவு 2 | இனம், மதம், மொழி, பால், திறன் குறைவுள்ள குழந்தைகள் இதன் காரணமாக குழந்தைகளுக்கு பாகுபாடு காட்டக் கூடாது. |
| பிரிவு 6 | உயிரோடு இருப்பதற்கான உரிமை குழந்தைகளுக்கு உண்டு. |
| பிரிவு 7 | குழந்தை ஒரு பெயரை பெற்றிருப்பதற்கு உரிமை உண்டு அது அரசால் அங்கீகரிக்கப்பட வேண்டும். தேசிய அடையாளத்திற்கும் உரிமை உண்டு. |
| பிரிவு 8 | ஒவ்வொரு குழந்தையும் தான் யார் என்ற அடையாளத்தை பெற்றிருக்க உரிமை உண்டு அதை யாரும் புறக்கணிக்கக் கூடாது. |
| பிரிவு 11 | குழந்தை கடத்தப்படுவதிலிருந்து பாதுகாக்கப்பட உரிமை உண்டு. |
| பிரிவு 16 | குழந்தைகளுக்கு தனிமை மற்றும் அந்தரங்கத்திற்குமான உரிமை உண்டு. |
| பிரிவு 19 | இழிவாக நடத்துதல் மனரீதியாகவோ, உடல் ரீதியாகவோ துன்பப்படுத்தப்படுதல் போன்றவற்றிலிருந்து குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும். |
| பிரிவு 21 | குழந்தைகள் தத்தெடுக்கப்பட்டால் சரியான கவனமும் பாதுகாப்பும் அளிக்கப்பட வேண்டும். |
| பிரிவு 22 | அகதிகளாக உள்ள குழந்தைகளுக்கு சிறப்புப் பாதுகாப்பும் உதவிகளும் செய்யப்பட வேண்டும். |
| பிரிவு 24 | குழந்தைகளுக்கு உடல் நலனுக்கான சேவையை பெறவும், சுத்தமான குடிநீர், ஊட்ட உணவு, பாதுகாப்பான சுற்றுச்சூழல் பெறுவதற்கான உரிமை உண்டு. |
| பிரிவு 25 | குடும்பத்தை விட்டு பிறரது கண்காணிப்பில் வளரும் குழந்தைகளுக்கு நல்ல வாழும் சூழல் தொடர்ந்து பரிசீலிக்கப்பட வேண்டும். |

# குழந்தை உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையில் அடங்கியுள்ள பிரிவுகள்

## பாதுகாப்பிற்கான உரிமைகள்

**பிரிவு 32** குழந்தைகளுக்கு ஆபத்தான பணியிலிருந்து பாதுகாக்கப்படவும், உடல் நலத்திற்கு கேடான சூழலிருந்து விடுவிக்கப்படவும் உரிமை உண்டு. வேலை செய்யும் பட்சத்தில் பாதுகாப்பு மற்றும் சரியான சம்பளம் பெறுவதற்கும் உரிமை உண்டு.

**பிரிவு 33** ஆபத்தான போதைப் பொருட்களால் பாதிக்கப்படாமல் இருக்க குழந்தைகளுக்கு உரிமை உண்டு.

**பிரிவு 34** பாலியல் பலாத்காரத்திலிருந்து குழந்தைகள் பாதுகாக்கப்பட உரிமை உண்டு.

**பிரிவு 35** குழந்தைகள் கடத்தப்படாமல் அல்லது விற்கப்படாமலிருக்க உரிமை உண்டு.

**பிரிவு 36** அனைத்துவித சுரண்டல்களிலிருந்தும் பாதுகாக்கப்பட குழந்தைகளுக்கு உரிமை உண்டு.

**பிரிவு 37** குழந்தைகள் யாராலும் கொடிய மற்றும் ஆபத்து விளைவிக்கக்கூடிய வகையில் தண்டிக்கப்படக்கூடாது.

**பிரிவு 38** 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளை இராணுவத்தில் சேர்வதற்கு வற்புறுத்தக்கூடாது.

**பிரிவு 39** துன்புறுத்தப்படுதல், ஓரங்கட்டப்படுதல், கீழ்தரமாக நடத்தப்படுவதிலிருந்து குழந்தைகள் காப்பாற்றப்பட உதவ வேண்டும்.

**பிரிவு 40** சட்டத்தை மீறியதாக குழந்தைகள் குற்றம் சாட்டப்பட்டால் சட்ட உதவி அளிக்க வேண்டும். மோசமாக நடத்தப்படாமல் சரியான விதத்தில் நடத்தப்பட உத்திரவாதம் அளிக்க வேண்டும்.

**பிரிவு 41** இந்த உடன்படிக்கையில் உள்ள விதிகளைவிட நாட்டின் சட்டங்கள் குழந்தைகளை நன்கு பாதுகாத்தால் அந்த சட்டங்களையே பின்பற்றலாம்.

**பிரிவு 42** பெரியவர்களும் இந்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள அனைத்து உரிமைகளையும் தெரிந்து கொண்டு குழந்தைகள் கற்றுக் கொள்ள உதவ வேண்டும்.



# குழந்தை உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையில் அடங்கியுள்ள பிரிவுகள்

## பங்கேற்பிற்கான உரிமைகள்

**பிரிவு 4** குழந்தை உரிமைகளை பாதுகாப்பது அரசின் கடமை. குடும்பங்களுக்கு அரசு உதவிகள் செய்வதன் மூலம் குழந்தைகள் தங்கள் திறன்களை வெளிப்படுத்தவும், சரியான விதத்தில் வளரவும் வாய்ப்பளிக்க வேண்டும்.

**பிரிவு 12** பெரியவர்கள் முடிவு எடுக்கும் போது தங்கள் கருத்துக்களைக் கூற குழந்தைகளுக்கு உரிமை உண்டு.

**பிரிவு 13** மற்றவர்களையும், தங்களையும் பாதிக்காத வண்ணம் தகவல்களை பெறுவதற்கும் என்ன நினைக்கிறார்களோ அதை பகிர்ந்து கொள்வதற்கும் குழந்தைகளுக்கு உரிமை உண்டு.

**பிரிவு 14** தனக்கென மதத்தை தேர்வு செய்ய குழந்தைகளுக்கு உரிமை உண்டு. பெற்றோர்கள் எது சரி எது தவறு என தேர்வு செய்ய உதவலாம்.

**பிரிவு 15** மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்கா வண்ணம் மற்ற குழந்தைகளோடு பழகுவதற்கும், குழுக்களில் அங்கத்தினராவதற்கும் உரிமை உண்டு.

**பிரிவு 17** குழந்தைகள் நலவாழ்விற்கான தகவல்களை தொடர்பு சாதனங்கள் மூலம் பெற்றுக் கொள்ள உரிமை உண்டு. குழந்தைகளுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய தகவல்கள் பரப்புவதை தொடர்பு சாதனங்கள் ஊக்குவிக்கக் கூடாது.

**பிரிவு 30** சொந்த கலாச்சாரம், மொழி, மதம், போன்றவற்றை கற்றுக்கொள்ள குழந்தைகளுக்கு உரிமை உண்டு. சிறுபான்மையினருக்கு சிறப்பு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்.



# குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாய ஆரம்பக் கல்விக்கான உரிமைச் சட்டம், 2009

## Right of Children to Free and Compulsory Education – (RTE) Act 2009




**ஆசிரியர் குழு**

முனைவர். ஜான் தேவவரம்
இயக்குனர், RCPDS

எர்ஸ்கின் அருணோதயம்
திட்ட இயக்குனர், SPEECH

நிர்மல் ராஜா
திட்ட அலுவலர், RCPDS

நியூட்டன் பொன்னமுதன்
திட்ட மேலாளர், SPEECH

**தொகுப்பு & வடிவமைப்பு**

திருமிகு. பழனிக் குமார்
ஆவண அலுவலர், SPEECH



**Designed by:**
Documentation Division SPEECH